பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 10 2025 7.15
புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

- சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிராவில் 88 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

- தீபாவளி பண்டிகையையொட்டி தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பசுமை பட்டாசுகளை விற்பதற்கும், வெடிப்பதற்கும் கட்டுப்பாடுகளுடன் உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

- தமிழகத்தில் எந்த பிரச்சினை என்றாலும் மத்திய அரசின் மீது பழிபோட்டு தப்பிக்க திமுக அரசு முயற்சிப்பதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

- ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் எனறு பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று இந்த தேர்தலுக்கான பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மத்திய அரசின் திட்டங்கள் குறித்த காணொலிகளை பகிருமாறும் அவர் பிஜேபியினரை கேட்டுக் கொண்டார்.

வாக்குச்சாவடி முகவர்கள் வலுவாக இருந்தால் வெற்றி நிச்சயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் வெற்றிக்காக நாள்தோறும் பிஜேபியினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த தேர்தலுக்கான இரண்டாவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

12 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி Gopalganj -ல் திரு Subhash Singh-ம், Chapra -வில் திருமதி Chhoti Kumari -யும் போட்டியிடுகின்றனர்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளமும் முதலாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

57 பேர் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

பீகார் சட்டப்பேரவை துணைத் தலைவரும், அக்கட்சியின் மூத்த தலைவருமான திரு நரேந்திர நாராயண் யாதவ், ஆலம் நகர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

>><><><><><<

ஓய்வுபெற்ற ராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் வழக்கப்படும் நிதியுதவி 100 சதவீதம் அதிகரிப்பதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக, பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களுக்கான நிதியுதவி 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><><<

தானிய உற்பத்தி வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தை பயன்படுத்தி, விவசாயிகள் லாபம் ஈட்ட வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கர்நாடக மாநிலம், Koppa மாவட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி மையத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம். வேளாண் கருவிகளின் விலை குறைந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

*நாட்டின் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்க, புதிய தொழில்நிறுவனங்களை தொடங்க மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.*

*>><><><><><<*

*தமிழகத்தில் எந்த பிரச்சினை என்றாலும் மத்திய அரசின் மீது பழிபோட்டு தப்பிக்க திமுக அரசு முயற்சிப்பதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாம்பழ விவசாயிகளை பாதுகாப்பதற்காக ஆட்சிக்காலம் முழுவதும் எதுவும் செய்யாமல் மத்திய அரசின் மீது பழிபோடுவது ஏன் என்று வினவியுள்ளார்.*

*திமுக அரசின் செயலற்ற தன்மை காரணமாகத்தான், மா விவசாயிகள் இன்னலுக்கு ஆளாகியுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழகத்தில் மாம்பழம் சார்ந்த தொழில்களை தொடங்கவும், குளிர்பதன கிடங்குகளை அமைக்கவும், குளிர்சாதன நிறுவனங்களுடன் பேச்சு நடத்த வேண்டியது யார் பொறுப்பு என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*மக்கள் நலனை புறக்கணித்து விட்டு, தேர்தல் நேரத்தில் தனது தந்தையான முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவச்சிலையை திறப்பது சாலைகளுக்கும் தெருக்களுக்கும் அவரது பெயரை சூட்டுவது என்ற விளம்பர அரசியலை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் செய்து கொண்டிருப்பதாக டாக்டர் எல் முருகன் குறைகூறியுள்ளார்.*

*>><><><><><<*

*சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிராவில் 88 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.*

*சத்தீஸ்கரின் சுக்மா மாவட்டத்தில் 27 நக்ஸலைட்டுகள் பாதுகாப்புப் படையினர் முன் சரணடைந்தனர்.*

*சரணடைந்தவர்களில் 16 பேருக்கு 50 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்ததாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.*

முன்னதாக மகாராஷ்டிராவின் Gadchiroli-யில் அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னாவிஸ் முன் 61 நக்ஸலைட்டுகள் சரணடைந்தனர்.

இவர்களுக்கு 6 கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மகாராஷ்டிராவில் இதுவரை இல்லாத அளவுக்கு நக்ஸலைட்டுகள் சரணடைந்திருப்பதாக திரு தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நக்ஸலைட்டுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் உறுதியான நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்றும் முதலமைச்சர் கூறினார்.

>><><><><><<

கென்யா நாட்டின் முன்னாள் பிரதமர் Raila Odinga-வின் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், Raila Odinga இந்தியாவின் நெருங்கிய நண்பர் என்று குறிப்பிட்டுள்ளார்.

குஜராத் முதலமைச்சராக பதவி வகித்தது முதல், தற்போது வரை Raila Odinga-வுடன் தாம் நட்புறவு வைத்திருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயுர்வேதா மற்றும் இந்தியாவின் பாரம்பரிய மருத்துவமுறையை அவர் போற்றியதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>><><><><><<

தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பசுமை பட்டாசுகளை விற்பதற்கும், வெடிப்பதற்கும் உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு பி ஆர் கவாய், நீதிபதி திரு வினோத் சந்திரன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

*தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதோடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பதற்கு ஏதுவாக வரும் 18 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதிவரை இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*19 மற்றும் 20 ஆம் தேதிகளில் பசுமைப்பட்டாசுகளை காலை 6 மணி முதல் 7 மணி வரையும், இரவு 8 மணி முதல் 10 மணி வரையும் வெடிக்க அனுமதிக்கப்படுவதாகவும் அந்த உத்தரவில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.*

*உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவினை தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா வரவேற்றுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில் பண்டிகைக் காலங்களில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*தில்லியில் பசுமை மற்றும் தூய்மையை பராமரிப்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.*

*>><><><><><<*

*பிரேஸில் குடியரசுத் துணைத்தலைவரும், அந்நாட்டு தொழில் வர்த்தகத்துறை அமைச்சருமான திரு. Geraldo Alckmin மூன்றுநாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.*

*நாளை நடைபெறவுள்ள வர்த்தகத்துறை ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கும் அவர், மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலுடன் பேச்சு நடத்துகிறார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர். பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி உள்ளிட்டோருடன் திரு. Geraldo Alckmin ஆலோசனை நடத்தவுள்ளார்.*

*>><><><><><<*

அமெரிக்க பொருளாதாரத்திற்கு எதிரான நடவடிக்கையில் பிரிக்ஸ் நாடுகள் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், பிரிக்ஸ் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கு எதிராக கூடுதல் வரி விதிக்கப்படும் என்று தாம் எச்சரித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன.

>><><><><><<

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர், பலுசிஸ்தான் மாகாணத்தில், ஆஃப்கான் தாலிபான் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்ட நடத்திய பதில் தாக்குதலில் 40 தாலிபான் வீரர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு ராணுவம் கூறியுள்ளது.

இதனையடுத்து, ஆஃப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் பதற்றம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>><><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா தற்போது ஆஸ்திரேலியாவை எதிர்த்து ஆடி வருகிறது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா சற்றுமுன்வரை 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

--------------

ஆசிய ஒருங்கிணைந்த படகு சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

மைசூரில் நடைபெற்ற இப்போட்டியில் *Thimiti Rashmita* தங்கப்பதக்கத்தையும், *Monali Swain* வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

*Mallama* வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

லிமாவில் நடைபெற்ற சர்வதேச ஜூடோ போட்டியின் மகளிர் 63 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் *Himanshi Tokas* வெண்கலப் பதக்கம் வென்றார்.

---------------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலின் பேட்டிங் பிரிவில் *Yashaswi Jaiswal* ஐந்தாவது இடத்திற்கும், பந்து வீச்சுப் பிரிவில் குல்தீப் யாதவ் 14 ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

---------------------------

பிரிஸ்பனில் நடைபெற்று வரும் அறிவுசார் திறன் குறைபாடு மாற்றுத் திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Bhuvi Agarwal* ஒரு தங்கம், 4 வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

--------------

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Tanvi Sharma* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 15-12, 15-7 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் *Oei Louisa Jovanka Sandi Winarto* – ஐ வென்றார்.

*Unnati Hooda, Rakshitha Sree, Talasala* ஆகியோரும் மகளிர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*>> End of News <<*